பிரிவு 21.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 21-வது பிரிவுக்குத் திருத்தம் கொடுத்திருந்த மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் இருக்கையில் இல்லை; திருத்தம் முன்மொழியப்படவும் இல்லை.

பிரிவு 21 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 22 முதல் 51 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

அட்டவணை 1, 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல், முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு திருத்தியபடி (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/78) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தியபடி, சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.50 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(6) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

இல்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 206. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங் களுக்காக நிலத்தை கையகப்படுத்துதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 18/78).

* 31—3—1978 ஆம் தேதியன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.